Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 23, 2023

செவ்வாய்க்கிழமை மே 23, 2023 | ஒளி: 09 கதிர்: 002 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## பிஸ்கட் விலைகள் 8–15 % குறைந்தன

இலங்கையில் திங்கட்கிழமை (22) முதல் அமலாகும் வகையில் பிஸ்கட் விலைகளை 8 முதல் 15 சதவீதம் வரை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிஸ்கட் உற்பத்தியாளர்கள் அறிவித்துள்ளனர். தொடர்ச்சி P12




### டொலருக்கு நிகரான

## ரூபாயின் பெறுமதி 18.7% ஆல் உயர்ந்தது

இந்த வருடத்தின் மே மாதம் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதி வரை, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 18.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P12

### இராணுவத்தால்

# உயிலங்குளத்தில் பௌத்த விகாரை

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி விஜயம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார், உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப் பிரிவால் அப்பகுதியில் புதிதாக பௌத்த விகாரை அமைக்க இராணுவத்தால் வேலைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், குறித்த நடவடிக்கையை வன்மையாக கண்டிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் இராணுவத்தினரால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக, மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து சார்ள்ஸ் எம்.பி, திங்கட்கிழமை (22) மதியம் குறித்த பகுதிக்கு விஜயம் செய்தார்.

தொடர்ச்சி P12



### அஸ்வெசும நிவாரண வேலைத்திட்டத்தில்

## பெருந்தோட்ட மக்களின் தகவல்களை திரட்டவில்லை

டி.ஷங்கீதன்

அரசாங்கம் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்படுத்தவுள்ள அஸ்வெசும எனும் நிவாரண வேலைத்திட்டத்தில் இதுவரையில் சேகரிக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொடர்பான தகவல்கள் முறையாக சேகரிக்கப்படவில்லை என்றும் வேலைத்திட்டத்தில் பெருந்தோட்ட மக்களையும் உள்வாங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12




## இந்த வருடத்துக்குள் இ-பாஸ்போர்ட்

### 3 நாள்களில் கடவுச்சீட்டு வீடுகளுக்கு வரும்

இந்த வருடத்துக்குள் இலத்திரனியல் கடவுச்சீட்டு (இ-பாஸ்போர்ட்) வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், விண்ணப்பதாரர் ஒருவரின் கடவுச்சீட்டு 3 நாள்களுக்குள் வீடுகளுக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12






### சமுர்த்தி உள்ளிட்ட உதவி திட்டங்களில்


## மலையக மக்களை ஓரங்கட்டவில்லை

### போலி பிரசாரம் என்கிறார் ஜீவன்

“சமுர்த்தி உள்ளிட்ட சமூக பாதுகாப்பு உதவி திட்டங்களில் இருந்து மலையக பெருந்தோட்ட மக்களின் பெயர்கள் வெட்டப்படுவதாக போலி பிரசாரத்தை முன்னெடுத்து, மக்கள் மத்தியில் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு சிலர் முயலுகின்றனர்” என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் திங்கட்கிழமை (22) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “சமுர்த்தி உள்ளிட்ட சமூக பாதுகாப்பு நிதி உதவிகளின் போது மலையகம் சமூகம் ஓரங்கப்பட்டுகின்றது. அவர்களின் பெயர்கள் வெட்டப்படுகின்றன என்ற பிரசாரத்தை எதிரணிகள் சில முன்னெடுத்து, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முற்படுத்துகின்றன. முன்னர் இந்தக் குறைபாடு இருந்திருக்கலாம். தொடர்ச்சி P12



## நடமாடும் விபசாரத்தில் அரகலய முக்கியஸ்தர் கைது

இளம் பெண்களை ஆகக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் நடமாடும் விபசார நிலையத்தை நடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், அரகலய ஏற்பாட்டாளர் உள்ளிட்ட ஏழுவர் அங்குருவாத்தொட ரெமுன பிரதேசத்தில் வைத்து, பாணந்துறை, வலான மோசடி தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேக நபர்களில், விபசாரத்தில் ஈடுபடும் பெண்கள் நால்வர், அவர்களை வாடகை வாகனத்தில் அமர்த்திச் சென்ற சந்தேகநபர்கள் இருவரும் அடங்குகின்றனர். தொடர்ச்சி P12

### எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்ய

# சினோபெக் – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கையின் நிலையான மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக் உடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் திங்கட்கிழமை (22) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் எம்.பி.டி.யூ.கே. மாபா பதிரனவும் சினோபெக் நிறுவன எரிபொருள் உற்பத்தி மற்றும் விநியோக திணைக்கள முகாமைத்துவப் பணிப்பாளர் சென் சென்க்மிம் ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

தொடர்ச்சி P12

## ஒட்டுமொத்த பணவீக்கம்

### கடுமையாக சரிந்தது

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்ட ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் ஏப்ரலில் 33.6 சதவீதமாகக் குறைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றன.

மார்ச் மாதம் 49.2 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம் ஏப்ரலில் 33.6 சதவீதமாக குறைந்துள்ளதுடன்,

மார்ச் மாதத்தில் 42.3 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 27.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், மார்ச் மாதத்தில் 54.9 சதவீதமாக இருந்த உணவு அல்லாத பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 39 சதவீதமாக குறைந்துள்ளதாக திணைக்கள தரவுகள் தெரிவிக்கின்றன.




## மன்னிப்பு கேட்பதால் எதுவும் மாறாது

### நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் டிரான்

சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்ட போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மன்னிப்பு கேட்பதால் அவருக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் இருக்க மாட்டார்கள் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொது பாதுகாப்பு அமைச்சில் திங்கட்கிழமை (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P12



## ஜனகவுக்கு பல கட்சிகள் ஆதரவு

### கூட்டமைப்பு இன்று தீர்மானம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க பல அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P12



## எம்.பிகளின் வீடுகள் எரிப்பு; ரிட் மனு வாபஸ்

2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற களேபரங்களில் ஆளும்கட்சி அரசியல்வாதிகளின் வீடுகள் தாக்கப்பட்டு, எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை வாபஸ் பெற்றுக்கொள்வதாக மனுதாரர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு திங்கட்கிழமை (22) அறிவித்தனர். தொடர்ச்சி P12

PAGE 1 தொடர்ச்சிகள்

## ரூபாயின் பெறுமதி 18.7% ஆல் உயர்ந்தது

மேலும் இந்தக் காலகட்டத்தில், இலங்கை ரூபாயின் பெறுமதி பல முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மே 19 வரையான காலப்பகுதியில் ஜப்பானிய யென்னுக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 24.1 சதவீதமாகவும், ஸ்டேர்லிங் பவுண்ட் 15.4 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது.

யூரோவுக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 17.5 சதவீதமாகவும் , இந்திய ரூபாயுடன் ஒப்பிடும் போது 18.7 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது.

2022ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி 44.8 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## உயிலங்குளத்தில் பௌத்த விகாரை

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், “நாட்டின் பல பாகங்களிலும் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகிறது. அதன் அடிப்படையில் உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542 ஆவது படைப்பிரிவால் அப்பகுதியில் புதிதாக ஒரு பௌத்த விகாரையை அமைக்க இராணுவத்தால் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்விடயத்தை வன்மையாக கண்டிக்கின்றேன். தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படாமைக்கு இவ்வாறான செயற்பாடுகள் காரணங்களாக உள்ளன. மன்னாரில் 5 பௌத்த விகாரைகள் உள்ளன. மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், சௌத்பார், தலைமன்னார் போன்ற இடங்களில் உள்ளன.ஆனால், இங்கே பௌத்த குடும்பங்கள் 50 கூட இல்லை. பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இந்த விடயத்தை உடனடியாக நான் புத்த சாசன அமைச்சரின் கவனத்துக்கும் மாவட்ட திணைக்கள அதிகாரிகளுக்கும் இவ்விடயம் குறித்து தெரியப்படுத்துகின்றேன். மக்களிடம் இருந்து எனக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. குறித்த பிரதேசத்தில் இராணுவத்தால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்ததை அடுத்தே நேரடியாக குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன்” என்றார்.

## பிஸ்கட் விலைகள் 8–15 % குறைந்தன

புதிதாக குறிக்கப்பட்ட விலைகள் தற்போது சந்தைக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக பிஸ்கட் உற்பத்தியாளர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்தை தொடர்ந்து பிஸ்கட் விலைகள் கணிசமாக அதிகரிக்கப்பட்டன.

விலை உயர்வு காரணமாக பொது மக்களின் பிஸ்கட் நுகர்வு குறைந்ததை அடுத்து, விலைகளைக் குறைத்த பிஸ்கட் நிறுவனங்கள், அவற்றின் அளவுகளையும் குறைத்தன.

இதனையடுத்தும் பிஸ்கட் நுகர்வு குறையத் தொடங்கியதுடன், உற்பத்தியாளர்கள் விலைகளைக் குறைக்க வேண்டும் என்று சமூக ஊடக பயனர்களால் சமீபத்திய மாதங்களில் பல பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

உள்ளூர் சந்தையில் உற்பத்தியாளர்கள் பிஸ்கட் விலையை குறைக்கும் வரை சிலர் புறக்கணிப்புக்கு அழைப்பு விடுத்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## இந்த வருடத்துக்குள் இ-பாஸ்போர்ட்

பொது பாதுகாப்பு அமைச்சில் திங்கட்கிழமை (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

மக்கள் இலகுவாக கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் 50 பிரதேச செயலக அலுவலகங்களில் வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் மாதத்தில் புகைப்படம், கைரேகை போன்றவற்றை சேகரிக்க 50 பிரதேச செயலகங்களில் பிரத்தியேக கருமபீடங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் அதன்பின்னர் எவரும் பத்தரமுல்லைக்கு வரத் தேவையில்லை என்றார்.

மேலும், முன்பதிவு செய்வதற்காக பணம் பெற்றுக்கொண்ட சுமார் 16 பேர் கைது செய்யப்பட்டதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.



## சினோபெக் – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கையில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் நுகர்வோர் சிரமங்களை எதிர்நோக்காத வகையில் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு இந்த முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி ஆகியவை கடந்த காலத்தில் எரிபொருள் ஏற்றுமதிக்கு போதுமான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் சவாலை எதிர்கொண்டன.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு பல்வேறு உத்திகள் குறித்து ஆராய்ந்ததுடன், எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற பெற்றோலிய நிறுவனங்களிடமிருந்து இலங்கைக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வது குறித்தும் ஆராய்ந்தது.

நாட்டில் செயற்படும் விநியோக விற்பனை முகவர் வலையமைப்புகள் மூலம் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்வதே இதன் நோக்கமாக இருந்தது. அதற்கமைய, இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இங்கு, சந்தையில் நுழையும் புதிய சில்லறை விநியோகஸ்தர்களுக்கான முக்கிய நிபந்தனைகளில், உள்நாட்டு வங்கிகளில் தங்கியிருக்காமல் அந்நியச் செலாவணித் தேவைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் திறன் இருக்க வேண்டும் என்பது பிரதானமானதாகும்.

அதன்படி, இந்த நிறுவனங்கள் குறைந்தபட்சம்,செயற்படத் தொடங்கி ஆரம்ப ஓராண்டு காலத்தில் வெளிநாட்டு மூலங்கள் மூலம் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும். இதற்கான அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைக்கப்பட்டன.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆகியவை குறித்த முன்மொழிவுகளை ஆய்வு செய்து, பேச்சுவார்த்தைகளுக்கு உட்பட்டு சீனாவின் சினோபெக், அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம், அமெரிக்காவின் ஷெல் ஆகிய நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்க பரிந்துரைத்தன.

சினோபெக் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு 45 நாள்களுக்குள் இலங்கையில் செயற்படத் தொடங்கும். இந்தச் செயல்முறையானது மிகவும் நிலையான மற்றும் நம்பகமான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதோடு நாட்டின் வலுசக்தித் துறையை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெருந்தோட்ட மக்களின் தகவல்களை திரட்டவில்லை

நிதி இராஜாங்க அமைச்சின் காரியாலயத்தில் திங்கட்கிழமை (22) நடைபெற்ற கலந்துரையாடலில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் நடைபெற்றதுடன் உலக வங்கி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அத்துடன் எம்.பிக்களான மனோ கணேசன், வேலுசாமி இராதாகிருஸ்ணன், மயில்வாகனம் உதயகுமார், வடிவேல் சுரேஸ் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர் கௌதமன் தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழு உறுப்பினர் மு.பரணீதரன்ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பின்வரும் விடயங்கள் உலக வங்கியின் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

ஒரு சில இடங்களில் இவற்றுக்காக தெரிவு செய்யபட்டுள்ளவர்கள் முழுமையாக தொழிற்சங்கத்தை முதன்மைபடுத்தியே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மேலும் தகவல்களை சேகரிக்க சென்றவர்கள் அநேகமானவர்கள் எந்தவிதமான அனுபவமும் இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு பயனாளிகளை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை தெரியாமல் இருக்கின்றார்கள்.

இந்தத் திட்டத்துக்கு உலக வங்கி நிதி உதவிகளை செய்கின்ற காரணத்தால் உலக வங்கி இது தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் கடந்த காலங்களில் பல நிவாரணங்கள் வழங்கப்பட்டாலும் அவற்றில் அநேகமானவை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை.

எனவே திட்டமிட்ட அடிப்படையில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே அஸ்வெசும நிவாரண திட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் உள்வாங்கப்பட வேண்டியது கட்டாயமாகும். அவர்கள் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக கடந்த பல வருடங்களாக உழைத்து வருகின்றார்கள்.

இந்த விடயத்தில் நிதி அமைச்சும் உலக வங்கியும் குறிப்பாக அரசாங்கமும் முறையான விதத்தில் பயனாளிகளை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடமாடும் விபசாரத்தில் அரகலய முக்கியஸ்தர் கைது

பிரதான சந்தேகநபர் அரகலயவின் முக்கிய அமைப்பாளராக செயற்பட்ட மொரட்டுவையை வசிப்பிடமாகக் கொண்ட 33 வயதானவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சமூக வலைத்தளங்களில் பிரசாரங்களை முன்னெடுக்கும் மேற்படி நபர், நடமாடும் விபசார நிலையத்தை நடத்திச் சென்றுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், ஒரு மூலோபாயத்தை கையாண்டு 50 ஆயிரம் ரூபாய்க்கு பெண்ணொருவரை பொலிஸார் விலைபேசியுள்ளனர்.

அதனடிப்படையில் சந்தேகநபர், சனிக்கிழமை (20) இரவு நான்கு பெண்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதான சந்தேகநபர், பல வருடங்களாக விபசார வியாபாரத்தை நடத்திச் சென்றுள்ளார். அதனூடாக பெருந்தொகையான பணத்தை அவர் சம்பாதித்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மலையக மக்களை ஓரங்கட்டவில்லை

முன்னர் இந்தக் குறைபாடு இருந்திருக்கலாம். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வேலை உள்ளது, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன கிடைக்கின்றன எனக்கூறி கிராம அதிகாரிகளால் அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கலாம். அப்போதும் நாம் தற்காலிக தீர்வுகளை பெற்றுக்கொடுத்தோம்.

இம்முறை அதிகாரிகள் நேரில் சென்று தகவல்களை திரட்டினர். எவருக்கும் பாகுபாடு காட்டப்படமாட்டாது. உதவிக் கொடுப்பனவை பெறுவதற்கு தகுதியான அனைவருக்கும் அது நிச்சயம் கிடைக்கும். இது தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன் நாம் பேச்சு நடத்தினோம். பாராளுமன்ற உரையின்போது பெருந்தோட்ட மக்கள் பற்றி அவர் தெளிவாக குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

15 இலட்சத்துக்கும் மேற்பட்ட மலையக தமிழர்கள் உள்ளனர். அவர்களில் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பேர்வரை பெருந்தோட்டங்களில் தொழில் புரிகின்றனர். இவர்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களை முறையாக அடையாளம் காண வேண்டும். மாறாக முழு சமூகத்தையும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சமூகமாக அடையாளப்படுத்த முற்படுவது, அந்தச் சமூகத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும். ஆகவே, முறையான வகையிலேயே பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேரில், 85 ஆயிரம் பேர் வரை பெருந்தோட்டப்பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இது 52 சதவீதமாகும். பட்டியலில் குறைப்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி ஆராய்ந்து, அவற்றை நிவர்த்தி செய்யும் பணியிலும் ஈடுபடுகின்றோம். எனவே, மக்கள் மத்தியில் வதந்திகளை பரப்பி, குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம்.

டிசெம்பர் மாதம் ஆகும்போது பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்கு வந்துவிடும். நாடு வழமைக்கு திரும்பிவருகின்றது. இதனால்தான் மக்கள் மத்தியில் எதிரணிகள் வதந்திபரப்பி வருகின்றன. அதேவேளை, பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக்க ரத்னாயக்கவை பதவி நீக்குவது தொடர்பான பிரேரணைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாக வாக்களிக்கும். இது விடயத்தில் நாம் அமைச்சர் பக்கமே நிற்போம். நாட்டில் தற்போது தடையின்றி மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது. மின் கட்டணத்தை குறைப்பது பற்றியும் பரீசிலிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் சுயாதீன ஆணைக்குழுவொன்றின் தவிசாளர் அரசின் திட்டங்களை குழப்பும் வகையில் செயற்படக்கூடாது. அவர் அரசியலை இலக்கு வைத்து செயற்படுகின்றார். எதிரணிகளும் அவரை பகடையாக பயன்படுத்தி அரசியல் நடத்தி வருகின்றன. இப்படியானவரை பதவி நீக்கும் யோசனையை நாம் ஆதரிப்போம்” என்றார்.

## ஜனகவுக்கு பல கட்சிகள் ஆதரவு



பிரேரணைக்கு ஆதரவாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்டவை பிரேரணைக்கு எதிராகவும் வாக்களிக்க தீர்மானித்துள்ள நிலையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீர்மானம், இன்றையதினம் (23) அறிவிக்கப்படவுள்ளது.

மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராக நின்ற ஜனக ரத்நாயக்கவுக்கு ஆதரவாக நிற்க கட்சி தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளதுடன், ஜனக ரத்நாயக்கவின் செயற்பாடுகளை ஒரு கட்சி என்ற ரீதியில் தாம் அங்கிகரிக்கவில்லை என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியில் இருந்து ஜனக ரத்நாயக்கவை நீக்கும் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், விவாதத்துக்குப் பின்னர் அன்று பிற்பகல் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னிப்பு கேட்பதால் எதுவும் மாறாது



எவராவது குற்றம் செய்துவிட்டு மன்னிப்பு கோரினால், விசாரணைகளை திரும்பப் பெற முடியாது என்றும் அவருக்கு எதிரான விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சீஐடியினருக்கு அவர் குறித்த பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் நாடு திரும்பியதும், விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படுவதே சாதாரண நடைமுறையாகும் என்று தெரிவித்த அமைச்சர், நாடு திரும்பியதும் விசாரணை நடத்தி வாக்குமூலங்களை சீஐடியினர் பதிவு செய்வார்கள் என்றார்.

பௌத்தம், இஸ்லாம் மற்றும் இந்து மதத்துக்கு எதிராக சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டதற்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள போதகர் பெர்னாண்டோ கடந்த வாரம் நாட்டை விட்டு வெளியேறினார்.

இந்நிலையில், போதகர் ஜெரோம், ஞாயிற்றுக்கிழமை (21) நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றையதினம் மாலை சூம் தொழில்நுட்பம் ஊடாக மன்னிப்புக் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எம்.பிகளின் வீடுகள் எரிப்பு...

இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்ததை தொடர்ந்து மனுதாரர்கள் தங்களது விண்ணப்பத்தை வாபஸ் பெற தீர்மானித்துள்ளதாக தெரிவித்த மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மனுவை மீளப்பெற நீதிமன்றத்தின் அனுமதியை கோரினார்.

அரசியல்வாதிகளின் வீடுகள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் (ஐஜிபி) மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி குறித்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி, மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 18 பேர் மனுவின் பிரதிவாதிகளாவர்.

பந்துல குணவர்தன, காமினி லோககே, ஜனக பண்டார தென்னகோன், பிரசன்ன ரணதுங்க, பிரசன்ன ரணவீர, சிறிபால கம்லத், எஸ், எம், சந்திரசேன, ஷெஹான் சேமசிங்க, ரோஹித அபேகுணவர்தன, கோகிலா குணவர்தன, சஹான் பிரதீப் உள்ளிட்ட 39 பேரின் வீடுகள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலைக்கழகத்தில் நான்கு பேராசிரியர்கள் நியமனம்


பேராசிரியர் என். கெங்காதரன்


கலாநிதி கே. சூரியகுமார்


கலாநிதி பூ. ஐங்கரன்


கலாநிதி திருமதி எஸ். எம். சி மகேந்திரன் அலோசியஸ்

■ எஸ். தில்லைநாதன்

யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகவும், ஒருவர் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பேராசிரியர் ஒருவர் துறைக்குரிய இருக்கைப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி எஸ். எம். சி மகேந்திரன் அலோசியஸ் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பூ. ஐங்கரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாயப் பொருளியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. சூரியகுமார் விவசாயப் பொருளியலில் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம், முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தில் மனித வள முகாமைத்துவத் துறையில் பேராசிரியரும் மனித வள முகாமைத்துவத் துறைத் தலைவருமான பேராசிரியர் என். கெங்காதரன் மனித வள முகாமைத்துவத் துறைப் பேராசிரியராக (துறைக்கான இருக்கைப் பேராசிரியர்) பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில்

# பிரசவத்துக்குப் பின்னர் பால்தேநீர்

■ எப். முபாரக்

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மகப்பேற்றுக்காக வரும் கர்ப்பிணி தாய்மாரின் நலன் கருதி, பிரசவம் நடந்தவுடன் பால்தேநீர் வழங்கும் நோக்கில் திருகோணமலை பஸார் உதவும் கரங்கள் அமைப்பின் வேண்டுகோளுக்கமைய சமூக சேவையாளர் நிக்லஸ் ரமேஷ் (அமைப்பாளர், திருகோணமலை பொது வைத்தியசாலை உதவி பணிக் குழு) சொந்த நிதியிலிருந்து பெறப்பட்ட பால்மா பக்கெட்டுகள் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐகத் விக்கிரம விக்கிரமரத்னவிடம் பணிக்குழு உறுப்பினர் லயன் பாஸ்கரனால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், பணிக்குழு உறுப்பினர்களான லயன் உதய சங்கர், எம்.எப் வலீத் ஜவ்பர்ஹசன் (ஆலோசகர், உதவும் கரங்கள் அமைப்பு), ஏ.எஸ் ஜவாஹிர், வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# தனது குழந்தையை தூக்கி தலைகீழாக அடித்த தந்தை

தன்னுடைய மூன்று வயதான குழந்தையைத் தூக்கி, நிலத்தில் தலைகீழாக அடித்த தந்தையை கைது செய்துள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர். அவிசாவளை, இஹல தல்துவ பிரதேசத்தில் வசிக்கும் நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குழந்தையை தூக்கி தலைகீழாக அடித்த மேற்படி நபர், மனைவியின் முன்பாக சென்று நஞ்சருந்தியுள்ளார். அதன்பின்னர் சந்தேகநபரையும் குழந்தையையும் பொதுமக்கள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அடிப்படை சிகிச்சையை பெற்றுக்கொண்டதன் பின்னர் வைத்தியசாலையில் இருந்து சந்தேகநபர் தப்பியோடியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த குழந்தையின் தலை பிளந்து காதுகளில் இருந்து இரத்தம் வெளியேறியதால், கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக அனுமதிக்கப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது என்றும் அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.



# ஓட்டோவுக்கு தீ வைத்த ஆசாமி 5 மாதங்களுக்கு பின் சிக்கினார்

■ எஸ்.சதீஸ்

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்பட மேற்பிரிவில் லயன் அறைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவுக்கு தீ வைத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் தேடப்பட்டுவந்த நபர், ஐந்து மாதங்களுக்குப் பின்னர், நோர்வூட் போற்றி தோட்டத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (21) கைது செய்யப்பட்டார். மேற்படி சந்தேக நபரை, போற்றி தோட்ட மக்கள் மடக்கி பிடித்து தம்மிடம் ஒப்படைத்தனர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேகநபர் நபர் பொகவந்தலாவ, எல்பட மேல்பிரிவில் பெண்ணொருவரை காதலித்து வந்துள்ளார். அந்த நபரை திருமணம் முடிக்க, காதலி மறுத்துவிட்டார். இந்நிலையிலேயே, அப்பெண்ணின் வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவுக்கு தீவைத்து விட்டு தலைமறைவாகிவிட்டார்.

எனினும், தன்னுடைய காதலி, போற்றி தோட்டத்திலுள்ள ஆலயத்துக்கு வருகைதந்ததை அறிந்து, அங்கு விரைந்த சந்தேகநபர், அப்பெண்ணின் கையை பிடித்து இழுத்துள்ளார்.

இதனை அவதானித்த அந்த மக்கள், அவரை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சந்தேக நபர் நோர்வூட் நிவ்வெளி பகுதியை சேர்ந்தவர் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



# கிழக்கு ஆளுநருடன் யுன்னான் மாகாண பிரதிநிதிகள் கலந்துரையாடல்

■ ஹஸ்பர்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் யுன்னான் மாகாண பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல், திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலில், யுன்னான் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இருதரப்பு வேலைத்திட்டம் உள்ளடங்கியிருந்தது.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஆகியோருடன் யுன்னான் ஆளுநர் வாங் யூபோ, சீனத் தூதுவர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் பங்கேற்றனர்.

# கொழும்பு கிழக்கு பிரிவுக்கு குவாஸியாக நியமனம்



பிரின்ஸ் கேட், கொழும்பு -12 இன் சட்ட ஆலோசகரும் சமாதான நீதவானுமாகிய எம். பீ. முஹம்மது ராசிக், இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் கொழும்பு கிழக்குப் பிரிவுக்கான காஜியாக நியமிக்கப்பட்டுள்ளார். கொழும்பு நீதிமன்ற உயர்நீதிபதி ம.வே.ஜே.கே. வீரமன் முன்னிலையில், 24 மார்ச் 2023 அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

போகஹகும்புர அலுகொல்லயைச் சேர்ந்த மர்ஹூம் இப்றாஹிம் சாஹிப் மிஸ்கின் பாவா மற்றும் மொஹமட் சாலி உம்மு சல்மா ஆகியோரின் புதல்வரான முஹம்து ராசிக், பண்டாரவளை சஹிரா கல்லூரி, அலுகொல்ல முஸ்லிம் பாடசாலை, குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லுரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். கடந்த 45 ஆண்டுகளாக, சட்ட ஆதரவு சேவைகளில் ஈடுபட்டு வரும் இவர், கொழும்பு மூத்த சட்டத்தரணி மற்றும் நோட்டரி பப்ளிக் என். மனோகரனின் துணைப் பணியாளராக இருந்து வருகிறார். ராசிக் எம்.ஆர்.லோ அஸோசியேட்ஸின் மூத்த ஆலோசகராகவும் இணை நிர்வாகியாகவும் பணியாற்றுகிறார்.

ஜனாப் ராசிக், கல்வி அபிவிருத்தி வட்டத்தின் தலைவர் ஹூசைன் ரஷாத் ஜனாஸா அறக்கட்டளையின் பணிப்பாளர் (சட்ட ஆலோசனை) சமாதான தூதுவரின் மனித உரிமை அமைப்பின் சட்ட ஆலோசகர் - கொழும்பு -12, மீரானியா ஜூம்மா மஸ்ஜித் (மார்கஸ்) அறங்காவலர் மற்றும் மலேசியாவை தளமாகக் கொண்ட DMDI (DUNIA MELAYU DUNIA ISLAM) என்ற சர்வதேச இலாப நோக்கற்ற அமைப்பில் கௌரவ உறுப்பினராகவும் உள்ளார்.

# வீதியில் கண்டெடுத்த நான்கு இலட்சம் உரியவர்களிடம் ஒப்படைப்பு

■ ரீ.எல் ஜவ்பர்கான்



வீதியில் கண்டெடுத்த நான்கு இலட்சம் ரூபாய் பணத்தை, பொலிஸார் மூலம் உரியவரிடம் ஒப்படைத்த சம்பவம் நேற்று (22) மதியம் காத்தான்குடியில் இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான வீதி, இரும்புத் தைக்கா பள்ளிவாயலுக்கு முன்னால், கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பணத்தை, காத்தான்குடியைச் சேர்ந்த எம்.எம் மொய்னுல்ஹக், கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த தெய்வதீபன் என்ற ஓட்டோ சாரதியும் கண்டெடுத்து இருந்தனர்.

குறித்த பணத்தை, காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம் சியாமிடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்து, குற்றத்தடுப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி பணத்தை உரியவரிடம் ஒப்படைத்தார்.

கடைக்காரர் ஒருவர் சீனி கொள்வனவுக்காகக் கொடுத்த மேற்படி பணத்தை, லொறிச் சாரதியான நபர் கொண்டு வரும்போதே காணாமல் போயுள்ளது. பணத்தைத் தொலைத்த நபர், மிகுந்த நன்றி உணர்வுடன் பணத்தைப் பெற்றுக் கொண்டார். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி எம். எஸ்.ஏ.எம் றஹீம் உட்பட பொலிஸ் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ரேந்தபொல விபத்தில் இருவர் காயம்



■ ஆ.ரமேஸ்.

வெலிமடை, கெப்பட்டிபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரேந்தபொல பகுதியில் திங்கட்கிழமை (22) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியை செப்பனிடுவதற்காக, தார் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை ஏற்றி சென்ற வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான பார ஊர்தி, வேக கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

பார ஊர்தியை செலுத்திய சாரதி, மற்றுமொருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கெப்பட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.



# ஆளுநருக்கு வவுனியாவில் வரவேற்பு

■ க. அகரன்

வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பி. எம்.எஸ் சார்ள்ஸை வரவேற்கும் நிகழ்வு நேற்று (22) காலை வவுனியாவில் இடம்பெற்றிருந்தது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வவுனியா நகரசபை வளைவில் இருந்து, வாகன பவனியாக அழைத்துவரப்பட்ட ஆளுநர், வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் வலய கல்விப் பணிப்பாளரால் வரவேற்கப்பட்டார்.

இதையடுத்து, வவுனியா தனியார் விடுதியில் வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது வர்த்தகர் சங்கத்தின் செயலாளர், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர், ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் உட்பட்ட உறுப்பினர்கள், கந்தசாமி கோவில் நிர்வாகத்தினர், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பொதுச் சுகாதார மருத்துவ மாதுகளாக நியமனம்



மத்திய சுகாதார அமைச்சால் கிழக்கு மாகாணத்துக்கு நியமனம் செய்யப்பட்ட ஐந்து பொதுச் சுகாதார மருத்துவ மாதுகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (22) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் நடைபெற்றது. இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே முரளிதரன் வழங்கி வைத்தார்.

அபு அலா

# பணிப்பெண்களின் மர்ம மரணங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

என்னதான் சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அவற்றில் சில புத்தகங்களுக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டு இருப்பதால், சாதாரண தொழிலாளர்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இதில், வீட்டுப் பணிப்பெண்களாகக் கடமையாற்றுவோர் அனுபவிக்கும் துயரங்கள் சொல்லில் அடங்காதவை. 'சாய்ப்புச் சட்டம்' இருந்தாலும் கடைகளில் கடமையாற்றுவோருக்கு, உரிய நாளில் பல நகரங்களில் அமல்படுத்துவதில்லை.

பெரும்பாலான வீட்டுப் பணிப்பெண்கள், தங்களுடைய குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டே வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். திரும்பி வரும்போது பலருக்கு இரட்டிப்பு சந்தோஷம் காத்திருக்கும். இன்னும் சிலர், இருந்ததையும் இழந்து நிர்கதியாகிவிடுவர்.

வயதுவந்த பிள்ளைகளை தங்களுடைய பெற்றோர் அல்லது கணவனிடம் விட்டுவிட்டே பெரும்பாலான தாய்மார் வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்வர். திரும்பி வரும்போது சில குடும்பம் சின்னாபின்னமாகி இருக்கும். குடும்பத்திலும் பாதுகாப்பு இருக்காது. அண்மைக்கால செய்திகள் அவற்றுக்கு சிறந்த உதாரணங்களாகும்.

ஆகையால், வீட்டிலிருக்கும் சிறுவர்கள், சிறுமிகள், பெண்பிள்ளைகள் போன்றோரின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்துவிட்டு, வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வதே தாய்மாருக்கு உசிதமானதாக அமையும். அங்கும் பல பெண்கள் வீட்டு எஜமான், எஜமானிகளால் பல்வேறான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகுவதும் தெரிந்ததே. இந்நிலையில், உள்ளூரில் வீட்டுப்பணிப்பெண்களாக பணியாற்றுவோர் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் சொல்லில் அடங்காதவை, இறுதியில் சடலமாகவே வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். இல்லையேல் அங்கவீனமடையச் செய்துவிடுகின்றனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அற்பசொற்பத்தை கொடுத்து கதையையே பலரும் புதைத்துவிடுகின்றனர். இதில், தரகர்களின் வகிபாகம் சமூகத்துக்கு ஒரு புற்றுநோயாகும்.

இதற்கிடையே தங்களுடைய இச்சைக்கு இனங்காத வீட்டுப் பணிப்பெண்கள் மீது, களவு குற்றச்சாட்டை முன்வைத்து, சிறைக்கும் தள்ளிவிடுவர். இல்லையேல் உயிரை எடுத்துவிடும் சம்பவங்கள் இடம்பெறாமல் இல்லை. தங்களுக்கு இலவசமாக கொடுக்கும் பொருட்களுக்கு அப்பால், நகை, பணத்தின் மீது பேராசைப்படாத பணிப்பெண்களும் இல்லாமல் இல்லை.

சில சம்பவங்கள் செய்தியோடு நின்றுவிடும். மேலதிக விசாரணைகள், அடுத்தகட்ட நடவடிக்கைள் எல்லாம் அத்தருணத்தில் மட்டுமே ஒளிக்கும். கொழும்பு உள்ளிட்ட பெரும் நகரங்களில் பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் வீட்டுப் பணிப்பெண்களாக கடமையாற்றுகின்றனர். அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்போரின் எண்ணிக்கை சொற்பமாகும்.

கடந்த காலங்களில் மர்மமாக மரணித்த வீட்டுப்பணிப்பெண்களின் எண்ணிக்கை அதிகமாகும். இறுதியாக பதுளையைச் சேர்ந்த ஆர். ராஜகுமாரி மரணித்துள்ளார். இதுவே இறுதியான மர்ம மரணமாக இருக்காது. எனினும், அப்பெண்ணுக்காக குரல்கொடுப்போரின் குரல்கள் ஓரிரு நாள்களுக்கு மட்டுமே உயர்ந்து ஒலிக்கும்.

மர்ம மரணங்கள் இடம்பெறும் போதெல்லாம் கடுமையான கண்டன அறிக்கையை விடும் வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம், அமைதியாகிவிடும். அரச சார்பற்ற நிறுவனங்கள் சில உரிமை குரல் எழுப்பி மௌனித்துவிடும். இந்நிலையில், பணிப்பெண்களின் மர்ம மரணங்கள் நீடிக்காமல் இருக்கவேண்டுமாயின் சட்டதிட்டங்கள் முறையாக அமல்படுத்தவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ் Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வெறுப்பு பிரசாரங்களின்

# மறைமுக நோக்கம் என்ன?

மொஹமட் பாதுஷா

இலங்கையில் நடக்கின்ற பெரும்பாலான நிகழ்வுகளை, 'வாதங்கள்'தான் பின்னாலிருந்து வழிநடத்தி வந்து கொண்டிருக்கின்றன. இனவாதம், மதவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம், தேசியவாதம், பிராந்திய வாதம், அடிப்படைவாதம் என்று இந்தப் பட்டியல் நீட்சி கொள்கின்றது.

ஆனால், குறிப்பாக இனவாதத்தையும் மதவாதத்தையும் கட்டுப்படுத்துவதற்கு ஆட்சியாளர்களும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுக்காமல், அதனை வைத்து தமக்கு தேவையான காரியங்களைச் சாதிக்க முற்பட்டதால், புதுப்புது இனவாதிகளும் மதவாதிகளும் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றனர்.

இந்தப் பின்னணியிலேயே இப்போது பாதிரியார் என தன்னை அடையாளப்படுத்தும் ஜெரோம் பெர்னாண்டோ வெளியிட்ட பௌத்த மதத்துக்கு எதிரான கருத்துகள், இலங்கை அரசியல் மற்றும் சமூகப் பரப்புகளில் கடுமையான அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கின்றன.

ஜேரோம், இதற்கு முன்னர் இஸ்லாமிய மதம் பற்றிய விமர்சனங்களை முன்வைத்து வந்தார். இந்து மதத்தை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் கருத்துகளையும் கூறி வந்ததாக அறிய முடிகின்றது.

ஆனால், அப்போதெல்லாம் கண்டுகொள்ளப்படாத இவரது மதவெறுப்பு பிரசாரங்கள் இப்போது, பௌத்த மதத்துக்கு எதிரான கருத்துகளை முன்வைத்த போது, கடுமையான எதிர்ப்பைச் சந்தித்துள்ளது. இலங்கையில் இதற்கு முன்னர் இன-மத வெறுப்பு பிரசாரங்கள் அல்லது செயற்பாடுகளுக்கு வெளிக்காட்டப்படாத எதிர்ப்பை இப்போது காண முடிகின்றது.

இப்படியான ஒரு சூழலில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் சமூகங்களுக்குள் ஒற்றுமையை உருவாக்குவதற்காகவும் நாட்டு மக்கள் முன்நிற்கின்ற ஒரு காலப் பகுதியில், அதற்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடிய கருத்தை ஒரு கிறிஸ்தவ மதகுரு கூறினாலும், பௌத்த துறவி சொன்னாலும், இந்து மதகுரு கூறினாலும், இஸ்லாமிய மத போதகர் கூறினாலும் அதனை கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

அந்தவகையில், ஜெரோம் பெர்னாண்டோ வெறுமனே மன்னிப்பு கேட்டால் மட்டும் போதாது. அவரால் ஏற்பட்ட சமூக விளைவுக்கு பரிகாரம் தேடப்படுவதுடன் அவருக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் இரு நிலைப்பாடுகள் இல்லை.

ஆனால், இலங்கையில் இன, மத வெறுப்பு பிரசாரங்கள் அல்லது நடவடிக்கைகள் இதுவே முதன் முறையானதா என்பதையும், இதற்கு முன்னர் இனவெறுப்பை கக்கியவர்கள் மீது அரச இயந்திரமோ பெருந்தேசியமோ என்ன நடவடிக்கை எடுத்தது என்பதையும் இவ்விடத்தில் அலச வேண்டியிருக்கின்றது.

இலங்கையில் எல்லாக் காலத்திலும் இனவாதமும் மதவாதமும் இருந்து வந்திருக்கின்றது. ஆனால், அவற்றைக் கட்டுப்படுத்த, அந்தப் பேய்களை ஒரு 'கீசா'வில் போட்டு அடைக்க, ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்காமல், அதிலிருந்து அரசியல் இலாபம் தேட முற்பட்டதால், புதுப்புது இன - மத வெறுப்பாளர்களுக்கு சாதகமான களம் உருவாகியுள்ளது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராகவும் தமிழர்களுக்கு எதிராகவும் இனவாதத்தை பேசியவர்கள், சிங்கள ஆட்சியாளர்களால் கண்டுகொள்ளப்படவில்லை. முஸ்லிம்களுக்கு எதிராகவும் இஸ்லாமிய மதத்தை அவமதிக்கும் விதத்திலும் பிரசாரங்களை மேற்கொண்ட ஞானசார தேரர் உள்ளிட்ட பௌத்த துறவிகள், அமைப்புகள், சிங்கள கடும்போக்காளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் சில ஊடகங்களுக்கு எதிராக சட்டம் சரிவர நிலைநாட்டப்படவில்லை.

இவ்வாறு, ஏற்கெனவே இனவாதம் பேசியவர்களுக்கு எதிராக, சிங்கள பெருந்தேசியம் இதே விதமான அக்கறையை வெளிக்காட்டி, அவர்களை தண்டித்திருந்தால் இன்று ஜெரோம் பெர்னாண்டோவுக்கு, பௌத்த மதத்துக்கு எதிராகப் பேசும் தைரியம் வந்திருக்காது.

இலங்கையில் கருத்தியல் ரீதியான இனவாதத்தை தோற்றுவித்த அநகாரிக தர்மபால முதற்கொண்டு சம்பிக்க ரணவக்க வரையான நபர்களை கட்டுப்படுத்தி இருந்தால், இனவாதத்தை கொட்டிய அரசியல்வாதிகள், பௌத்த துறவிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தால், இஸ்லாமிய அடையாளத்தை தவறாக பயன்படுத்தி நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான திட்ட வகுப்பாளர்களை மக்களுக்கு வெளிப்படுத்தி இருந்தால், புதியவர்களுக்கு ஒரு பயம் வந்திருக்கும்.

பொதுவெளியில் மட்டுமன்றி, நாட்டின் உயரிய சபையான பாராளுமன்றத்தில் கூட சரத் வீரசேகர உள்ளிட்ட பல சிங்கள அரசியல்வாதிகள், ஏனைய சிறுபான்மை இனங்களை எச்சரிக்கும் வகையில் இப்போதும் பேசிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இப்படித்தான் முஸ்லிம்களுக்கு எதிராக, பல அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் பிரசாரங்களைச் செய்தார்கள்.

மறுபுறத்தில், சிறுபான்மை அரசியல்வாதிகளும் அவ்வப்போது தமது இனத்துக்காகப் பேசுகின்றோம் என்ற நினைப்பில், இனவாதத்தை உமிழ்கின்றார்கள். இவர்களை எல்லாம் முறையாகக் கட்டுப்படுத்தி இருந்தால் புது இனவாதிகளை, மதவாதிகளை கட்டுப்படுத்துவது இலகுவாக இருந்திருக்கும்.

இவ்வாறு பௌத்த மதவாதத்தை மட்டுமன்றி, இந்துத்துவ கொள்கைகளை முன்னிறுத்தி இனவாதம் செய்ய முற்படுகின்ற குழுக்களையும், ஏதோ ஒரு பின்னணியுடன் இஸ்லாமிய மதத்தின் பெயரால் குரோதங்களை வளர்க்க முற்படும் கும்பல்கள் மற்றும் மத நல்லிணக்கத்துக்கு எதிரான பிரசாரகர்கள் என ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள தரப்பினர் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தால், புதிய 'ஜெரோம்'களுக்கு ஒரு பயம் வந்திருக்கும்.

இதற்கு மேலதிகமாக, வடக்கு, கிழக்கில் இன்னும் இனவாத அடிப்படையிலான நகர்வுகளும் மதத்தை கருவியாகப் பயன்படுத்தும் நில ஆக்கிரமிப்புகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பெயர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய பௌத்த துறவிகளும், சிங்கள அரசியல்வாதிகளும் இனவாதத்தையும் மதவாதத்தையும் கூர்தீட்டிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

ஆனால், பெருந்தேசிய அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் இவ்வளவு காலமும் இனவாதத்தை ஒரு மறைமுக ஆயுதமாக உபயோகித்து விட்டு, இப்போது சிங்கள மக்களுக்கு என்று வரும்போது மட்டும், அதற்காக குரல்கொடுக்க முற்படுவது, 'நீங்கள் எல்லா மதங்களையும் இனங்களையும் சமமாக மதிக்கவில்லை' என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

உண்மையில், ஜெரோம் பெர்னாண்டோ மட்டுமன்றி, மத வெறுப்பு கருத்துகளை விதைப்போருக்கும், வாய்க்கும் மூளைக்கும் தொடர்பில்லாமல் இனவாதம் பேசுவோருக்கும் எதிராக, கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால், இலங்கையில் இதுவரை அது நடக்கவில்லை என்பதுதான் கவலையாகும். இங்கு இன்னுமொரு முக்கிய விடயத்தை கவனிக்க வேண்டியுள்ளது.

அதாவது, நாட்டில் நடக்கின்ற இனவாத மற்றும் மதவாத செயற்பாடுகள் உள்ளடங்கலாக, பயங்கரவாத தாக்குதல்கள் போன்ற பாரதூரமான நிகழ்வுகளுக்குப் பின்னால் கூட, ஏதோ ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரலும் மறைகரங்களும் இருக்கின்றன என்பதே பட்டறிவாகும்.

யுத்தம் அல்லது பயங்கரவாதமும் அதற்கெதிரான அரச நடவடிக்கையும் கிட்டத்தட்ட 30 வருட அரசியலைச் செய்வதற்கான களநிலையை சிங்கள ஆட்சியாளர்களுக்கு மட்டுமன்றி, தமிழ் அரசியல்வாதிகளுக்கும் வழங்கியது.

அதற்குப் பிறகு 2010ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இனவாதமும் மதவாதமும் பல மறைமுகத் திட்டங்களுடன் அரசியல் இலாபம் பெறும் சூட்சுமத்துடன் நகர்த்தப்பட்டு இருக்கின்றது. ஒரு மதத்தை பயன்படுத்தியாவது பயங்கரவாத தாக்குதலை நடத்தியேனும், அரசியல் செய்ய துணிகின்ற அரசியல் தரப்பும் வெளிநாட்டுச் சக்திகளும் உள்ளன என்பது இரகசியமல்ல!

இந்த இடத்தில் திரும்பி பார்த்தால், 2021 'அரகலய' மக்கள் எழுச்சியானது மூவின மக்களையும் ஒற்றுமைப்படுத்தியது. அரசாங்கத்தை கேள்வி கேட்கும் தைரியத்தை மக்களுக்கு வழங்கியது. ஆட்சியாளர்களின் சட்டையைப் பிடித்து உலுக்கியது; துண்டைக்காணோம் துணியைக் காணோம் என்று ஓடவிட்டது. இதற்கெல்லாம் காரணம் இனம், மதம் கடந்த ஒற்றுமையாகும்.

இதனை இப்போதைய ஆட்சியாளர்கள் மட்டுமன்றி, எதிர்காலத்தில் அதிகாரத்துக்கு வர நினைக்கின்ற எந்தப் பெருந்தேசிய கட்சியும் விரும்பாது என்பதே யதார்த்தமாகும். இந்த ஒற்றுமையை உடைத்து ஒரு பிரித்தாளும் அரசியலைச் செய்ய வேண்டிய தேவை, அரசியல் தரப்புகளுக்கு ஏற்பட்டு வருவதாக தெரிகின்றது. எனவே, இப்போது அடுத்த கட்ட அரசியலைச் செய்வதற்காக, மதவாதம், மதவெறுப்பு, இனவாதம் என்ற ஏதாவது ஒரு கருவியை, யாரோ பயன்படுத்த முற்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது.

ஜேரோம் பெர்னாண்டோவுக்கு அரசியல் பின்னணி இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவருக்கு எதிரான எதிர்வினையில் ஓர் அரசியல் செய்ய முடியும். அதுபோல நாளையும் ஏனைய மதங்களை மையப்படுத்திய பிரசாரங்களும், இனங்களை பாதுகாத்தல் என்ற தோரணையில் இனவெறுப்பு பேச்சுகளும் முன்வைக்கப்படக் கூடிய ஆபத்து இருக்கின்றது.

சஹ்ரானுக்குப் பின்னால், ஞானசாரவுக்குப் பின்னால் இனவாத அரசியல்வாதிகளுக்குப் பின்னால் இருப்பவர்கள் யார் என்று தேடிப் பார்ப்பது போல, இவருக்குப் பின்னால் யாரும் இருக்கின்றனரா எனவும், இன்று இனவாதம் பேசுகின்ற அரசியல்வாதிகளின் நோக்கம் என்ன என்பதையும் ஆராய வேண்டும்.

யார் என்ன கூத்து ஆடினாலும், சதித் திட்டங்களை நகர்த்தினாலும், மத போதகர்கள் வேடதாரிகளும் அரசியல்வாதிகளும் என்னதான் கூறினாலும், இலங்கையில் சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமை சீர்குலையாது புத்திக்கூர்மையுடன் செயற்பட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு சாதாரண பொதுமகனுக்கும் உள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

கேட்கக்கூடாதவைகளைக் கேட்க, அநேகர் பிரியப்படுகின்றார்கள். ஆனால், தங்களைப் பற்றிய உண்மைகளை மறைத்து விடவே முயல்வார்கள். இப்படிப்பட்டவர்கள், அடுத்தவர்களை அவமானப்படுத்த சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பார்கள். கரிய எண்ணம் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள்.

வீதிகளில், சந்திகளில் பலரும் ஒன்றுகூடிப் பேசுவது எல்லாமே நல்ல விடயங்கள் அல்ல! பிறரைக் கேவலமாக விமர்சிப்பதாகவே இருக்கும். காலத்தின் அருமைகளைப் புரியாதவர்கள், அலங்கோலமாகப் பொழுதை விரயமாக்குகின்றார்கள்.

தங்களை விடப் புத்திசாலிகள் எவருமே இல்லையென, அறிவிலிகளே பெருமைப்படுவார்கள். வானத்து சந்திரனை மண்ணில் இருந்து திட்டுவது போல, நல்லோரைத் திட்டுவதும் வெறுப்பதும் நகைப்புக்கு உரியன.

பேசுபவர்கள் யாவரும், புத்திசாலிகள் அல்ல! மௌனமாக இருப்பவர்கள் ஒன்றுமே தெரியாதவர்களும் அல்ல. நிறைவானவன் அமைதியாவான். மௌனம் அறிவை வளர்க்கும்; ஞானத்தை மேம்படுத்தும். கருணை உள்ளவர்கள் உலகை இரசிப்பார்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மூன்று மாதங்கள் கடந்தும் சீர்செய்யப்படாத கணினி

கந்தளாயில் இருந்து கொழும்புக்கு செல்வதற்கு , ரயிலில் ஆசனம் முன்பதிவு செய்யச் சென்றால், கணினி இயந்திரம் பழுதடைந்து உள்ளதாக கந்தளாய் ரயில் நிலையத்தில் தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகப் பழுதடைந்துள்ள இந்தக் கணினி இயந்திரம் இன்னமும் சீர்செய்யப்படாததால், இவ்வாறு தெரிவிக்கப்படுவதுடன் ஆசனம் முன்பதிவு செய்யப்படும் இடத்திலும் சிங்களம், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் அறிவித்தலும் போடப்பட்டுள்ளது. எனவே, ஆசனத்தை முன்பதிவு செய்வதற்கு தம்பலகாமம் அல்லது திருகோணமலைக்குச் செல்லுமாறு இங்கு தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், வான்எல, கந்தளாய், பேராறு, அக்போபுர, வாத்தியாகம போன்ற பகுதிகளில் இருந்து கொழும்புக்கு செல்லுகின்ற பயணிகள், ஆசனங்களை முன்பதிவு செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறு ரயில் ஆசன முன்பதிவுகளை மேற்கொள்வதாக இருந்தால், 40 கிலோ மீற்றர் தூரம் தாண்டி, திருகோணமலைக்கு செல்ல வேண்டும். இதனால் நூற்றுக் கணக்கான ரூபாய் செலவு செய்து, செல்ல வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் பொது மக்களின் நலன் கருதி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

–எப். முபாரக்




# செய்திக்குரிய பாடநூல் மாணிக்கவாசகத்தின் அனுபவங்கள்

## இவர், 'இதழியலின் புதுமைப் பித்தன்' என்பதை நிரூபித்துள்ள புத்தகம்



அ.நிக்ஸன்



ஈழத் தமிழர்களின் அரசியல் விவகாரத்தை இந்தியா 1987 இல் கையாண்ட முறையின் பெறுபேறுகள் பல எதிர்வினைகளுக்குக் காரண காரியமானது (Causality) என்ற தொனியை 'நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்' என்ற தனது செய்தி அனுபவப் பகிர்வு நூலில் அமரர் பொன்னையா மாணிக்கவாசகம் எடுத்துரைக்கிறார்.

'தமிழ்ப் பத்திரிகை உலகின் புதுமைப்பித்தன்' (Innovator), 'மூத்த செய்தியாளர்' மாணிக்கவாசகம், போர்க் காலத்தில் உயிர் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி இருந்தவர். ஆனால், அவருடைய செய்தி எழுத்தின் மதியுகமும், விதியை மதியால் வெற்றி பெறக்கூடிய சாமர்த்தியமும் (Dexterity) அவரது உயிரைக் காத்தது எனலாம்.

ஆனால், நோயின் பிடியில் சிக்கியபோது, மரணத்தை எதிர்பார்த்த ஒரு நிலையில், தனது செய்தி அனுபவங்களையும் ஈழத் தமிழர்களின் அரசியல் எதிர்நோக்கிய சிக்கல்கள், இந்திய - இலங்கை அரசுகளின் அணுகுமுறைகளால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி ஆதாரங்களுடன் எதிர்காலத் தமிழ் சந்ததிக்குரிய வரலாற்றுப் பொக்கிசம் ஒன்றை நூலாகப் படைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத 1983 இல் ஈழநாடு பத்திரிகை மூலமாகச் செய்தித்துறைக்குள் கால்பதித்த மாணிக்கவாசகம், தகவல் தொழில்நுட்பம் அதி உச்சத்தில் வளர்ச்சியடைந்த 2023 ஏப்ரல் மாதம் பன்னிரெண்டாம் திகதி மரணிக்கும் வரை பணியாற்றிருக்கிறார். அதாவது எழுதிக் கொண்டே இருந்தார்.

வயதானவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவு இருக்காது என்பர். அல்லது வயதானவர்கள் அதனைக் கற்கவே முடியாதென்பர். ஆனால் இவருக்குப் புதிய தகவல் தொழில்நுட்பத்தின் அத்தனை செயல் முறைகளும் நன்கு பரீட்சயமாக இருந்தன.

இதன் பிரகாரம் இந் நூல், மாணிக்கவாசகத்தின் இதழியல் வகிபாகம் மற்றும் செய்தி ஒன்று எவ்வாறு கருவாகி உருவாகி மலர்கிறது என்கிற வரையறையையும், செய்தியின் தன்மைகள் (Nature of the News) பற்றியும் எடுத்துரைக்கிறது.

அதாவது செய்தியாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய சமூக வகிபாகத்தையும் அதற்கான அர்ப்பணிப்பையும் இந் நூல் புடம்போட்டுக் காண்பிக்கிறது. 66 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள அவருடைய செய்தி அனுபவம் ஒவ்வொன்றும், உறுதியான - நியாயமான தகவல்களை வெளிப்படுத்துகின்றன.

அத்துடன் செய்தி பற்றிய எல்லா விளக்கங்களையும் உள்ளடக்கித் தரும் முறையிலும் நூல் அமைந்துள்ளது. குறிப்பாகச் செய்தி ஒன்றை, ஒரு கருத்து, ஒரு நிகழ்ச்சி, சிக்கல் பற்றிய உண்மையான, சரியான, சமநிலையான குறிப்பு, நேர்மையானதாக, நிகழ்காலத்தோடு தொடர்புடையதாக, மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலான விளக்கங்களாகவும் அமைந்துள்ளன. உதாரணமாகத் 'திசைமாறிய சமாதான முயற்சி', 'மோதல்களும் இருபக்க உயிர்ப் பலிகளும்', 'வடக்குக் கிழக்கு மாகாண சபையும் இந்திய அமைதிப் படையின் வெளியேற்றமும்', 'இந்திய தேசிய பாதுகாப்பும் இலங்கை விவகாரத் தலையீடும்' போன்ற தலைப்புகளிலான கட்டுரைகளைக் குறிப்பிடலாம்.

'இந்தியாவின் ஒதுங்கியிருந்து செயற்படுகின்ற போக்கு' என்ற தலைப்பிலான கட்டுரை மற்றும் இந்தியா பற்றிய ஏனைய சில கட்டுரைகள் ஊடே இலங்கை விவகாரத்தில் இந்திய இராஜதந்திரத் தோல்வி என்ற தொனி வெளிப்பட்டுள்ளது.

ஆனால், மாணிக்கவாசகம் அவ்வாறு நேரடியாக எழுதவில்லை. சம்பவங்கள், இந்திய அமைதிப்படை வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருந்த காலச் செயற்பாடுகள் பற்றிய செய்திகள், குறிப்புகள் மூலம் இந்திய இராஜதந்திரத் தோல்வி என்பதை மாணிக்கவாசகம் நாசூக்காக உணர்த்துகிறார். தன்னுடைய விருப்பங்களை விமர்சனங்களாக அவர் முன்வைக்கவில்லை.

'நியூ' (New) என்றால் புதியது என்று பொருள். இதனைப் பன்மையில் கூறும்போது 'நியூஸ்' (News) அதாவது புதியன என்று பொருள்படுகிறது. சேம்பர்ஸ் (Chambers Dictionary) என்ற ஆங்கில அகராதி, நியூஸ் என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் புதிதாகக் கேட்கப்படுகின்ற ஒன்று இப்பொழுதுதான் நடைபெற்ற, ஏதாவது ஒன்றைப் பற்றிய முதல் தகவல் என்று விளக்கம் கொடுப்பதாக ஜேர்னலிசனம் வேட்பிறஸ் (journalism.wordpress.com) என்ற செய்திப்பாடக் குறிப்பில் கூறப்படுகின்றது.

செய்தி என்ற சொல்லுக்குப் பலர் இலக்கணம் வகுக்க முயன்றனர். ஆனால், எந்த இலக்கணமும் முழுமையானதாக அமையவில்லை. செய்திக்குத் தரும் விளக்கம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

குறிப்பாக, பிபிசி உலகச் செய்திச் சேவையின் ஆங்கில செய்தியிடல் முறை வேறாக இருக்கும். ஆனால், மாணிக்கவாசகம் மேற்கத்தைய, ஐரோப்பிய செய்தியிடல் முறைகளை அப்படியே பின்பற்றி, பிபிசி உலகத் தமிழோசைக்குச் செய்திகளையும் செய்தி விமர்சனங்களையும் வழங்கவில்லை.

மாறாகத் தனக்கென்றொரு வடிவத்தையும், அந்த வடிவம்தான் ஈழத்தமிழ்ச் செய்தியிடல் முறை (Elam Tamils News system) என்ற நம்பிக்கையுடன் உரிய தொழில் தகுதியோடு (Professionalism) மிடுக்குடன் (Valiant Man -Sparkle) வெளிப்படுத்தியிருந்தார். செய்தி ஒன்றுக்கு வழங்கப்படும் விளக்கத்தைத் தொகுத்துக் கூறலாம். ஒன்று, எதனையாவது வெளிக்காட்டுவது செய்தி.

இரண்டாவது, நடைமுறையிலிருந்து சாதாரணமானவற்றிலிருந்து மாறுபட்ட எதுவும் செய்தியாகும். மூன்றாவது, ஒரு சமுதாயத்தில் பெரும்பாலான மக்களைப் பாதிக்கின்ற, அவர்களால் புரிந்து கொள்ளக் கூடிய எந்த ஒரு நிகழ்ச்சியும், கருத்தும் செய்தியாக உருவம் பெறுகின்றன. ஆகவே செய்திக்குரிய இந்த விளக்கத்தின் பிரகாரம், 'புத்தர் சிலை வடிவில் வந்த பேரின ஆக்கிரமிப்பு', 'பண்டார வன்னியன் நினைவாக', 'சூசைதாசனின் சீற்றம்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள செய்திக் கட்டுரைகளைக் கூறலாம்.

1982 இல் வவுனியாவில் புத்தர் சிலை வடிவில் பேரினவாத ஆக்கிரமிப்பு என்று ஆரம்பிக்கும் கட்டுரையில், அப்போதைய தமிழர் அரசியல் நிலை பற்றிய சம்பவங்களை ஒப்புவிக்கிறார் மாணிக்கவாசகம்.

ஜே.ஆர் ஜயவர்த்தனவின் மறைமுக இனவாதங்கள், அதற்குரிய எதிர்வினையாகத் தமிழ் மன்னன் பண்டார வன்னியனுக்குச் சிலை வைக்கும் தீர்மானங்கள் வரை கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல சம்பவங்கள், செய்திக்குரிய மூலப் பண்பை (Newsworthy Source Attribute) சுட்டி நிற்கிறது.

செய்தியாளர் எது செய்தி என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பதைப் போல, செய்தி எங்கே கிடைக்கும் என்பதை அறிந்திருக்கவும் வேண்டும். பொதுவாக எப்பொழுதும் எங்கும் செய்திகள் கிடைக்கலாம். இருந்தாலும் சில குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றால் செய்திகளை எளிதாகவும் மிகுதியாகவும் பெற இயலும். அவ்வாறான இடங்களைச் செய்தி மூலங்கள் என்பர். வவுனியா, தச்சன்குளம் விவகாரம் தொடர்பான செய்தியும் அதனுடன் தொடர்புடைய 'அபகரித்த காணிகளைத் திருப்பித்தரலாம் தானே' என்ற தலைப்பில் வெளியான செய்திக் கட்டுரையும் அதற்கு உதாரணமாகின்றன.

சொல்ல வரும் சம்பவங்கள் பற்றிய சித்திரிப்புகளில் மாணிக்கவாசகம் தனது எதிர்பார்ப்புகளைப் புகுத்தவில்லை. நடந்தவற்றை ஆதாரங்களோடும் தன்னுடைய நேரடி அனுபவங்கள் ஊடாகவும் உண்மைத் தகவல்களை வெளிப்படுத்துகிறார்.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் தொம்சன் பவுண்டேசனின் ஆசிரியர் குழுவின் ஆய்வு மையம் (Editorial study Centre of Thomson Foundation) செய்தியாகக் கூடிய இருபது வகைகளை தொகுத்து வழங்கியுள்ளது. அந்த இருபது வகைகளில் புதுமையானது (Novelty), மனிதத் தாக்கம் (Personal Impact), உள்ளூர் நடவடிக்கைகள் (Local affairs), குற்றம் (Crime), மோதல் (Conflict), சமயம் (Religion), மனித ஆர்வமானவை (Human Interest), மர்மம் (Mystery), தேசிய இனம் (Nationality) போன்ற அம்சங்கள் முக்கியமானவை. இந்த அம்சங்கள் மாணிக்கவாசகத்தின் நூலில் ஆழமாகத் தென்படுகின்றன.

இதற்கு இவருடைய மும்மொழித் தேர்ச்சியும் வழிசமைத்திருக்கின்றன. முழுமையான ஒரு செய்திக்குரிய அம்சங்கள் (Newsworthy Features) நூலின் ஒவ்வொரு பகுதியிலும் விவரமாகவும் சுருக்கமாகவும் பொருத்தமான இடங்களில் தெளிவாகக் காண்பிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு செய்தியிலும் தலைப்பு, முகப்பு, உடல் என்ற மூன்று பகுதிகள் உள்ளன. இவற்றைச் செய்தியின் கட்டமைப்பு என்று கூறலாம். செய்தியின் மையக் கருத்து அல்லது தலைமைக் கருத்து செய்தியின் தலைப்பில் இடம்பெற வேண்டும். இது தேசியமட்டச் செய்திகளுக்கு மாத்திரமல்ல, பிராந்தியச் செய்திகளுக்கும் பொருந்தும்.

அமெரிக்காவின் மூத்த செய்தியாளர் எச்.மார்னிஸ், செய்தி என்பதை 'அவசர அவசரமாக நடைபெறும் வரலாறு' என்று கற்பிதம் செய்கிறார். இப்படிப்பட்ட செய்தியைச் சுமந்து வரும் செய்தித்தாளை எப்படி வாசித்தாலும் எவ்வளவு நேரம் வாசித்தாலும் செய்திகளை வாசித்துப் புரிந்து கொள்ள முடிவதற்குக் காரணம், அவற்றை எழுதும் முறைகளே எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார். மாணிக்கவாசகம் எழுதிய செய்திகளையும் அவருடைய செய்தி அனுபவம் குறித்த இந்த நூலையும் வாசிக்கும்போது அமெரிக்கச் செய்தியாளர் மார்னிஸ் சுட்டிக்காட்டிய விடயங்கள் பொருந்துகின்றன.

ஆகவே இந்த நூல் தற்போதைய இளம் செய்தியாளர்களுக்கும், செய்தி ஊடகத்துறைக்கும் ஒரு பாடப்பரப்பாகவும் (Newsworthy Syllabus) மற்றும் போர்க்கால ஆதாரங்களாகவும் விளங்குகின்றன. குறிப்பாக ஈழத்தமிழ் அரசியல் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் தகவல்களைத் இந்த நூல் தாங்கி நிற்கின்றது.



# 'பிச்சைக்காரன் 3' எப்போது?

விஜய் ஆண்டனி நடித்து, இயக்கி, இசை அமைத்து, எடிட்டிங் செய்து தயாரித்த திரைப்படம் 'பிச்சைக்காரன் 2'. இந்தப் படம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகி திரையரங்கில் ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் 'பிச்சைக்காரன்' படத்தின் அளவுக்கு 'பிச்சைக்காரன் 2' படத்தின் வசூல் இல்லை என்றாலும் இந்தப் படம் ஓரளவு வசூலை பெற்று வருவதாக விநியோகஸ்தர்கள் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் 2025 ஆம் ஆண்டு 'பிச்சைக்காரன்' படத்தின் மூன்றாம் பாகத்தை உருவாக்க இருப்பதாக விஜய் ஆண்டனி தெரிவித்துள்ளார்.

இரண்டாம் பாகம் போலவே மூன்றாம் பாகத்தையும் தானே இயக்க இருப்பதாகவும் முக்கிய வேடத்தில் நடிக்க இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் 'பிச்சைக்காரன் 3' திரைப்படத்தின் கதை முற்றிலும் வித்தியாசமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# வேற லெவலில் சிம்பு

'STR48' திரைப்படத்துக்காக நடிகர் சிம்பு, வேற லெவலில் லண்டனில் உடற்பயிற்சி செய்து தயாராகி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலக நாயகன் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் தயாரிப்பில் தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் உருவாக இருக்கும் திரைப்படம் 'STR48'.

இந்தப் படத்துக்காக தாய்லாந்தில் பாதுகாப்பு கலை குறித்த பயிற்சியில் இருந்த சிம்பு, தற்போது சிறப்பு உடற்பயிற்சிக்காக லண்டன் சென்றுள்ளார்.

இந்தப் படம் ஒரு சரித்திர கதையம்சம் கொண்ட அதிரடி ஆக்சன் படம் என்றும் சிம்புக்கு மாஸ் காட்சிகள் அனைத்தும் இந்தப் படத்தில் இருப்பதாக இது குறித்து இயக்குநர் தேசிங்கு பெரியசாமி தெரிவித்துள்ளார்.

மேலும் இது ஒரு மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவாகும் படம் என்றும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு இன்னும் ஒரு சில வாரங்களில் தொடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.



# கனவு ஹீரோவுடன் செல்பி

இயக்குநர் விக்னேஷ் சிவன், 90களில் பிறந்தவர்களின் கனவு ஹீரோவான ஸ்பைடர் மேன் நடிகருடன் செல்பி எடுத்துக் கொண்டுள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவான கேன்ஸ் விழாவுக்கு இயக்குநர் விக்னேஷ் சமீபத்தில் சென்றிருந்தார்.

இந்நிலையில் கேன்ஸ் விழாவில் கலந்துகொண்ட இயக்குநர் விக்னேஷ் சிவன், ஸ்பைடர் மேன் கேரக்டரை 90ஸ் கிட்ஸ்களுக்கு அறிமுகப்படுத்திய நடிகர் டோபி மாகுவேருடன் இணைந்து செல்பி எடுத்துக் கொண்டுள்ளார்.

அந்தப் புகைப்படத்தை தற்போது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் பதிவிட்ட நிலையில், ரசிகர்கள் இயக்குநர் விக்னேஷ் சிவனை புகழ்ந்து வருகின்றனர்.

கற்பனையில் மட்டும் சூப்பர் ஹீரோவைப் பார்த்துக் கொண்டிருந்த 90-ஸ் கிட்ஸ்களுக்கு கடந்த 2002 இல் இயக்குநர் சாம் ரைமி 'ஸ்பைடர் மேன்' திரைப்படம் மூலம் ஒரு வீரமான சூப்பர் மேனை கண்முன் கொண்டுவந்தார். இந்தக் கதாபாத்திரத்தில் நடித்தவர்தான் நடிகர் டோபி மாகுவேர்.

இந்நிலையில் டோபி மாகுவேருடன் இயக்குநர் விக்னேஷ் சிவன் எடுத்துக்கொண்டுள்ள புகைப்படம் பாராட்டை குவித்து வருகிறது.



# 'டக்கர்' டிரைலர்..!

சித்தார்த் நடித்த 'டக்கர்' என்ற திரைப்படம் வரும் ஜூன் 9ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாக இருக்கும் நிலையில் டிரைலர் வெளியாகி வைரலாகி வருகிறது.

சித்தார்த் ஜோடியாக திவ்யான்ஷா நடித்துள்ள 'டக்கர்' படத்தில் முதல் முறையாக இரண்டு வேடத்தில் யோகி பாபு நடித்துள்ளார்.

மேலும் அபிமன்யு சிங், முனிஷ்காந்த், ஆர்ஜே விக்னேஷ் காந்த் உட்பட பலர் நடிப்பில் உருவாகிய இந்தப் படம் ஓர் அதிரடி ஆக்சன் படம் என்பது டிரைலரில் இருந்து தெரிய வருகிறது.

பல வருடங்களாக சித்தார்த்தை ஒரு ரொமான்ஸ் நாயகனாகவே பார்த்து வந்த ரசிகர்களுக்கு அதிரடி ஆக்சன் படத்திற்கும் சித்தார்த் பொருந்துவார் என்பதை நிரூபிக்கும் வகையில் இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

கார்த்திக் கிரிஷ் இயக்கத்தில் உருவான இந்தப் படத்திற்கு நிவாஸ் பிரசன்னா இசையமைத்துள்ளார். இந்தப் படம் சித்தார்த்துக்கு வெற்றிப் படமாக அமையுமா என்பதை பார்ப்போம்.



# 'தளபதி 68' படத்தில் அஜித்?

தளபதி விஜய் நடிக்க இருக்கும் 'தளபதி 68' படத்தை வெங்கட் பிரபு இயக்க இருப்பதாகவும் ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்க இருப்பதாகவும் யுவன் சங்கர் ராஜா இசையமைக்க இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 'தளபதி 68' படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்ததை அடுத்து தனது நண்பர்களுடன் கேக் வெட்டி கொண்டாடிய இயக்குநர் வெங்கட் பிரபு செய்தியாளர்களை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் வெங்கட் பிரபுவின் தந்தை கங்கை அமரன், அஜித் மற்றும் விஜய் சேர்ந்து நடிக்கும் படத்தை தனது மகன் வெங்கட் பிரபு இயக்க வேண்டும் என்று கூறியதை அடுத்து இந்தப் படத்தில் அஜித் நடிக்க வாய்ப்பு இருக்கிறதா என செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்கு பதிலளித்த வெங்கட் பிரபு, "அது என் தந்தையின் ஆசை; ஆனால் இந்தப் படத்தில் அஜித் நடிக்கவில்லை. இந்தப் படத்தின் அப்டேட்டுகள் 'லியோ' படத்தின் ரிலீஸ்-க்கு பின்னர் வெளியாகும் என்றும் கூறினார்.

தஞ்சாவூர்

# மதுபானத்தில் சயனைட்

மதுபானசாலையொன்றில் விற்பனை செய்யப்பட்ட மதுவில் 'சயனைட்' கலக்கப்பட்டிருந்த சம்பவம் தஞ்சாவூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த மதுபானசாலையில் விற்பனை செய்யப்பட்ட மதுவைப் பருகிய இருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோது, அவர்களது உடலில் சயனைட் கலந்திருப்பது தெரியவந்துள்ளது.



இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த மதுபானசாலையில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து மதுபானசாலைக்கு சீல் வைத்த பொலிஸார், இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உத்தரபிரதேசம்

# படகு கவிழ்ந்ததில் இருபதுக்கும் மேற்பட்டோர் மாயம்

படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 20 க்கும் மேற்பட்டோர் மாயமான சம்பவம் உத்தர பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரபிரதேசத்தில் உள்ள கங்கை ஆற்றிலேயே நேற்றைய தினம் (22) இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இப் படகில் சுமார் 40 பேர் பயணித்துள்ள நிலையில் அதிக எடை காரணமாக படகு கவிழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காணாமல் போனவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜப்பான்

# ஒருபோதும் குறையாது; ஜோபைடன் திட்டவட்டம்

“மேற்கத்திய நாடுகள் உக்ரேனுக்கு அளித்து வரும் ஆதரவு ஒருபோதும் குறையாது” என அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் உறுதி அளித்துள்ளார்.

ஜப்பானில் நடைபெற்ற ஜி-7 மாநாட்டில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், G7 நாடுகள் தங்கள் உறவை சீனாவுடன் மட்டும் இணைக்காத வகையில் பல்வகைப்படுத்த ஒப்புக் கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் 'F-16' போர் விமானங்களை உக்ரேனுக்கு வழங்குவது போரின் தீவிரத்திற்கு வழிவகுக்காது என்றும் ரஷ்ய எல்லையைத் தாக்க அவற்றைப் பயன்படுத்த மாட்டோம் எனவும் உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கி உறுதியளித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.






# ஐ.பி.எல்: வெளியேற்றப்பட்ட பெங்களூர்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரிலிருந்து றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வெளியேற்றப்பட்டுள்ளது.

பெங்களூருவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டான்ஸுடனான போட்டியில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே தொடரிலிருந்து பெங்களூர் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: குஜராத்

பெங்களூர்: 197/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி ஆ.இ 101 (61), பப் டு பிளெஸி 28 (19), மிஷெல் பிறேஸ்வெல் 26 (16), அனுஜ் ராவட் ஆ.இ 23 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரஷீட் கான் 1/24 [4])

குஜராத்: 198/4 (19.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் ஆ.இ 104 (52), விஜய் ஷங்கர் 53 (35) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 2/32 [4], ஹர்ஷால் பட்டேல் 1/29 [4])

போட்டியின் நாயகன்: ஷுப்மன் கில்

முன்னதாக மும்பையில் நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்நிலையில், சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது தகுதிகாண் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸும் டைட்டான்ஸும் மோதவுள்ளன.



சாய்ந்தமருது கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில்

## லீடர் அஸ்ரப் வித்தியாலயம் 36 இடங்களைப் பெற்று சாதனை

நூருல் ஹுதா உமர்

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கோட்ட மட்டத்திலான பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மாணவர் மொத்தமாக 36 இடங்களை பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

சாய்ந்தமருது அல்- ஜலால், பௌஸி மைதானங்களில் நடைபெற்ற இப்போட்டிகளில் 10 முதலிடங்கள், 13 இரண்டாமிடங்கள், 13 மூன்றாமிடங்களைப் பெற்ற அஸ்ரப் வித்தியாலய மாணவர், 12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டத்தையும் தனதாக்கி கொண்டுள்ளனர்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## செல்சியை வென்ற மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செல்சியாவுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.


சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூலியன் அல்வரேஸ் பெற்றிருந்தார்.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

## இன்டர் மிலனை வென்ற நாப்போலி

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற இன்டர் மிலனுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான நாப்போலி வென்றது.



பானிய லா லிகாத் தொடர்:

## வலென்சியாவிடம் தோற்ற றியல் மட்றிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், வலென்சியாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் றியல் மட்றிட் தோற்றது.

வலென்சியா சார்பாகப் பெறப்பட்ட கோலை டியகோ லொபேஸ் பெற்றிருந்தார்.

பிரித்தானியா

## தனது சொந்த இதயத்தை அருங்காட்சியகத்தில் பார்த்த பெண்


பெண்ணொருவர் தனது சொந்த இதயத்தை 16 ஆண்டுகள் கழித்து அருங்காட்சியகத்தில் பார்த்த விநோத சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

ஜெனிஃபர் என்ற யுவதிக்கே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவருக்கு 22 வயதாக இருந்த போது, எளிதில் சோர்வடைவதாக உணர்ந்துள்ளார். இது குறித்து அவர் வைத்தியரை நாடியபோது அவருக்கு அதிர்ச்சியொன்று காத்திருந்துள்ளது.

அவரை பரிசோதித்த வைத்தியர் அவருக்கு கட்டுப்படுத்தப்பட்ட கார்டியோமயோபதி (restrictive cardiomyopathy) இருப்பதாகவும், இதயமாற்று அறுவை சிகிச்சை செய்யவில்லை என்றால் அவரது உயிருக்கு ஆபத்து நேரிடும் எனவும் எச்சரித்துள்ளனர்.

**ஜெனிஃபர் என்ற யுவதிக்கு 22 வயதாக இருந்த போது, எளிதில் சோர்வடைவதாக உணர்ந்துள்ளார். அவர் வைத்தியரை நாடியபோது, இருதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் எனக்கூறப்பட்டது. 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் பொருத்தமான இதயம் கிடைத்து, அவருக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து, 16 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தனது இதயத்தை அவர் அண்மையில் பார்வையிட்டார்.**

இதனையடுத்து புதிய இதயத்துக்காக காத்திருந்த போது, ஜெனிஃபருக்கு 2007ஆம் ஆண்டி ஜூன் மாதம் பொருத்தமான இதயம் கிடைத்தது. இந்நிலையில் அவருக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து, 16 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தனது இதயத்தை அவர் அண்மையில் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## வேகமாக பரவும் புதிய இதய நோய்

### பெற்றோர்களே உஷார்

இதயத்தில் ஏற்படும் ஒருவித வைரஸ் தொற்றால், ஒரு குழந்தை உயிரிழந்த நிலையில் மேலும் ஏழு சிறுவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் பிரித்தானியாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெற்கு வேல்ஸ் மற்றும் மேற்கு இங்கிலாந்தில் இப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இதயத்தில் இருக்கும் வீக்கம், அலர்ஜியை ஏற்படுத்தும் ஒரு வகை நோய் பாதிப்பு கடந்த ஒரு வருடமாகவே பிறக்கும் குழந்தைகளுக்கு கண்டறியப்பட்டு வருகிறது.



இந்த நோய் பதினைந்து குழந்தைகளுக்கு கண்டறியப்பட்டுள்ள நிலையில் அவர்களின் 9 பேருக்கு எண்டோ வைரஸ் இருப்பது உறுதியானது.

இந்த வைரஸ் சுவாச நோய் மற்றும் கை மற்றும் கால்கள் தொடர்பான நோய்கள், மூளை காய்ச்சலை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்கா

## பல் வரிசைக் கிளிப்பை விழுங்கிய இளைஞர்




இளைஞர் ஒருவர் எதிர்பாராத விதமாக வெள்ளிப் பல் வரிசைக் கிளிப்பை விழுங்கிய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

விஸ்கான்சின் மாகாணத்தை சேர்ந்த 22 வயதான குறித்த இளைஞர் தன் பற்கள் மீது 4 புள்ளி ஒன்று சென்டி மீற்றர் அளவு கொண்ட வெள்ளிப் பல் வரிசைக் கிளிப்பை மாட்டியிருந்தார்.

அவருக்கு வலிப்பு ஏற்பட்டபோது எதிர்பாராத விதமாக அதனை விழுங்கிவிட்டார். இந்நிலையில் குறித்த பல் வரிசைக் கிளிப்பானது இளைஞரின் நுரையீரல் காற்றுப்பாதையில் சிக்கிக்கொண்டது. இதனையடுத்து உடனடியாக மருத்துவமனைக்கு சென்ற இளைஞருக்கு, எக்ஸ்ரே எடுத்து பார்த்த மருத்துவர்கள், ப்ரோன்கோஸ்கோபி முறையில், சிறிய கமெரா பொருத்தப்பட்ட மெல்லிய கருவியை நுரையீரலின் காற்றுப்பாதைக்குள் விட்டு, வெளியே எடுத்தனர்.

பின்னர் நுரையீரலில் ஏற்பட்ட சிறிய அளவிலான இரத்தக்கசிவை சலைன் மூலம் சரி செய்தும், சுவாசப்பாதையில் இறுகிய தசைகளை ஸ்டீராய்டு கொடுத்து சரிசெய்தும், இளைஞரை முழுமையாகக் குணமாக்கி வீட்டிற்கு அனுப்பியுள்ளனர்.


நேபாளம்

## செயற்கைக் கால்கள் படைத்த சாதனை

போரில் இரு கால்களை இழந்த முன்னாள் நேபாள இராணுவ வீரர் ஒருவர், செயற்கைக் கால்களுடன் எவெரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

43 வயதான ஹறி புதாமகருக்கு முழங்காலுக்குக் கீழ் இரு கால்களும் கிடையாது. பிரித்தானியாவுக்காக ஆப்கானிஸ்தானில் நடந்த போரில் பங்கேற்றபோது, 2010- ஆம் ஆண்டில் தனது இரு கால்களையும் அவர் இழந்தார்.

இந்நிலையில் உடல் ரீதியான சவால்களால் துவண்டு போகாமல், விடாமுயற்சியுடன் செயற்கை கால்களின் துணையுடன் எவெரெஸ்டில் ஏறி ஹறி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை, 23 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.